
MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only




Printed Matter

## பாதி நோன்பு
## (கோகுல்தா நிறுவுதல்)

மார்ச் 26

To

BOOK POST

If Undeliveried please return to ...
Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165
Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin
## Diocese of Marthandam
## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




மலர் 21 மார்ச் 2025 இதழ் 3

# Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 01.03.2025 | Saturday | 11.00 am | Preaching - Vincent De Paul | Kuzhithurai |
| 02.03.2025 | Sunday | 07.00 am | Sunday Mass | Mankadu |
| 04.03.2025 | Tuesday | 10.00 am<br>05.45 pm | Pastoral Council Meeting<br>Preaching | Bishop's House<br>Vettumani Shrine |
| 06.03.2025 | Thursday | 04.30 pm | School Day | Mankuzhi |
| 07.03.2025 | Friday | 10.00 am | PF General Body Meeting | Bishop's House |
| 08.03.2025 | Saturday | 10.00 am | Women's Day-Holy Mass & Preaching | Chengalpet Diocese |
| 09.03.2025 | Sunday | 03.00 pm | Legion of Mary<br>Holy Mass | Kuzhithurai<br>Shalom Home |
| 10.03.2025 - 14.03.2025 | Monday - Friday | | Holy Episcopal Synod | Catholicate Centre |
| 15.03.2025 | Saturday | | Convocation | Mar Ephraem Engineering College |
| 16.03.2025 | Sunday | | Sunday Mass | Vellachiparai |
| 18.03.2025 | Tuesday | 10.00 am | Chapel Blessing and Holy Mass - Clergy Home | Kazhuvanthittai |
| 19.03.2025 | Wednesday | 06.00 am | Feast Mass | Sisters of St. Joseph and St. Mark Mecode |
| 21.03.2025 - 23.03.2025 | Friday - Saturday | | Convention | Trichy |
| 25.03.2025 | Tuesday | 10.30 am | Episcopal Consecration | Neyattinkara Diocese |
| 30.03.2025 | Sunday | 07.00 am | Sunday Mass | Ganapathikal |




# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 22 மார்ச் 2025 இதழ். 3

**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press, Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*






மலர். 22 பெப்ரவரி 2025 இதழ். 2


**Address :**
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail:mardiobulletin@gmail.com




# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam




மலர்.22 மார்ச் 2025 இதழ்.3

## முக்கியமான நாட்கள்
### மார்ச் 2025

- 01 பாகுபாடு இல்லாத தினம்
- 03 உலக வனவிலங்கு தினம், உலக செவித்திறன் தினம்
- 04 தேசிய பாதுகாப்பு தினம்
- 08 சர்வதேச மகளிர் தினம்
- 15 உலக நுகர்வோர் உரிமைகள் தினம்
- 16 தேசிய தடுப்பூசி தினம்
- 20 சர்வதேச மகிழ்ச்சி தினம்
- 21 உலக கவிதை தினம்
- 22 உலக தண்ணீர் தினம்
- 23 உலக வானிலை தினம்
- 24 உலக காசநோய் தினம்
- 25 சர்வதேச பிறக்காத குழந்தை தினம்
- 27 உலக நாடக தினம்

## உள்ளடக்கம்

1. Circulars 3–5
2. மறைமாவட்ட இளங்குருக்களின் தொடர் உருவாக்கப் பயிற்சி 6
3. விவிலிய பணிக்குழு 6
4. திருத்தொண்டர்களின் பெற்றோர்களுக்கான கூடுகை 6
5. துறவியர் சங்கமம் 6
6. சுவிசேஷ சங்கம் 7
7. எம்.எஸ்.சி. பள்ளிகளின் கத்தோலிக்க மாணவர் கூட்டமைப்பின் ஆண்டுவிழா 7
8. நெய்யாற்றின்கரை மறைமாவட்டத்தின் தேர்வு நிலை ஆயர் மறைமாவட்டத்திற்கு வருகை தந்தார் 7
9. D.S.S கன்னியர் இல்ல அடிக்கல் நாட்டுதல் 8
10. தாய்மார் சங்கம் 8
11. குருக்களின் தியானம் 8
12. குருத்துவ அருட்பொழிவின் பொன்விழா கொண்டாட்டம் 8
13. மறைமாவட்ட கூடுகைகள் 9
14. இளங்குருமடச் செய்திகள் 9
15. மறைபரப்புத் தளச்செய்திகள் 9
16. மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூடுகை 10
17. MCYM 10
18. MIDS 11
19. திருமண ஆயத்தப்பயிற்சி 13
20. MCA 14
21. Health for One Million (Hom) 15
22. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 16
23. மறைவட்ட செய்திகள் 17
24. Hom - Special School for the Mentally Retarded 20
25. ஆயரின் பெப்ரவரி மாத நிகழ்வுகள் 21
26. இம்மாதம் நினைவு கூர 23
27. Bishop's Diary 24

*Printed by*
Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852



**Most Rev.Vincent Mar Paulos**
Bishop of Marthandam

Bishop's House
Marthandam
K.K.Dist 629 165

Cir.No.2/2025 17.02.2025

## CIRCULAR

***அன்பு அருட்தந்தையரே, அருட்சகோதரிகளே, இறை மக்களே!***

**“நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகை பலிகளே கடவுளுக்கு உகந்தவை” (எபி 13:16)**

இறையருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக என்ற இறைவேண்டலுடன் இக்கடிதத்தை எழுதுகிறேன். நமது மார்த்தாண்டம் தலத்திருச்சபையானது மறைத்தூதுப்பணியிலும், நம்பிக்கை வாழ்விலும் படிப்படியாக வளர்ந்து வருகிறது. அதற்கு பொதுநிலையினராக, திருநிலையினராக ஒவ்வொருவரும் தந்துவரும் ஒத்துழைப்பிற்கும், பங்கேற்பிற்கும் நன்றி கூறுகிறேன்.

ஒரு மறைமாவட்டம் என்ற நிலையில் பல்வேறு அடித்தளக் கட்டமைப்புகள் இன்றியமையாதது என்பதை நாம் அறிவோம். குருத்துவப் பயிற்சிக்கான இளங்குருமடமும், பணிக்குழுக்கள் ஒருங்கிணைப்பதற்கான மேய்ப்புப்பணி நிலையமும், நோயுற்ற அல்லது ஓய்வுப்பெற்ற குருக்களுக்கான இல்லமும், மறைமாவட்ட நிர்வாக அலுவலகம், சமூக சேவை ஒருங்கிணைப்பு மையமென இவையாவும் அவசியமே. இந்த கட்டமைப்புகள் அனைத்தும் முழுமையாக கட்டி முடிக்கப்படாவிட்டாலும் குறைந்த வசதிகளுடன் அவைகள் செயல்பட்டு வருகின்றன.

மறைமாவட்டத்தில் இத்தகைய அடிப்படை தேவைகளுள் ஒன்று இத்தலச்திருச்சபையின் இறைமக்கள் சமூகம் இணைந்து இறைவனை வழிபட உதவும் பேராலயம் ஆகும். "என் இல்லத்தை மீண்டும் கட்டியெழுப்புங்கள். அது எனக்கு உகந்ததாய் இருக்கும். அங்கே, நான் மாட்சியுடன் விளங்குவேன்" (ஆகாய் 1:8). இதன் முக்கியத்துவத்தைக் குறித்து ஒரு சுற்றுமடல் 2019-ம் ஆண்டு நவம்பர் திங்கள் உங்களுக்கு எழுதியிருந்தேன். 2020 ஜனவரி 29-ம் தேதி பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பேராலயக் கட்டுமான பணிகள் கடவுளின் அருளால் 60 சதவீதம் நிறைவடைந்தி ருக்கிறது. கடந்து வந்த பாதையில் கொரோனா போன்ற தடைகள் வந்த போதும் கட்டுமானப் பணியை தொடர கடவுள் அருள் கூர்ந்தார். இம்முயற்சியை தங்கள் உழைப்பாலும் சொல்லாலும் செயலாலும், ஜெபத்தாலும் பொருளுதவியாலும் உதவி வருகின்ற அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்கிறேன். 40 சதவீதப் பணிகள் இன்னும் நிறைவு பெற உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பையும் தாராள மனதையும் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.


பேராலயக் கட்டுமானத்தில் மார்த்தாண்டம் தலத்திருச்சபை இறைமக்கள் சமூகத்தினர் ***அனைவருடைய பங்கேற்பும்*** இருக்க வேண்டுமென்று மனதார விரும்புகிறேன். அது வற்புறுத்தலினால் அல்ல மாறாக ***தாராள மனத்துடன்*** அமைய வேண்டுமென்று அன்புடன் அழைக்கிறேன். இதன் தொடர் தேவைகளைக் குறித்து 2020, 2021 ஆகிய ஆண்டுகளில் நினைவூட்டல் கடிதம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. பல்வேறு வழிமுறைகள் முன் மொழியப்பட்டும் இன்னும் மக்களின் பங்கேற்பு தோய்வு கண்ட நிலையிலேயே இருக்கிறது. எனவே மறைமாவட்ட குருக்கள் மன்றம் மற்றும் நிதி நிர்வாகக்குழுவின் பரிந்துரைப்படி ஒரு எளிய



கருத்தை முன்வைக்கின்றேன். இக்கருத்து மேய்ப்புப்பணி அறிவுரைக் குழு உறுப்பினர்களுடனும் கலந்துரையாடப்பட்டது. ஒவ்வொரு பங்கும், குடும்பம் ஒன்றுக்கு ஆண்டிற்கு 500/- ரூபாய் வீதம் சேமித்து மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஒப்படைப்பது ஆகும். இதனை நான்கு முறை ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முன் ஆண்டுகளின் நிலுவைத்தொகையை 2024-25 நிதியாண்டில் பங்கின் ஆண்டு கணக்கு ஒப்படைக்கும் போது இணைத்துக்கொள்ள அறிவுறுத்துகிறேன். ஏற்கெனவே செலுத்தியிருப்பின் செலுத்திய தொகை பங்கின் கணக்கில் வரவு வைக்கப்படும். இந்த வகையில் உதவுவதுடன் பேராலய கட்டுமானத்திற்கு தேவையான ***பொருள்களை பேராலய பங்குத்தந்தையோடு கலந்தா லோசனை செய்து கொடுக்க முன் வரவேண்டுமென்று*** கேட்டுக்கொள்கிறேன். நமது மறைமாவட்டத்தின் அடையாளச் சின்னமாக விளங்கும் பேராலயக் கட்டுமானம் நிறைவுக்கு வர நம்முடைய உழைப்பின் ஒரு பகுதியை உவகையுடன் சமர்ப்பித்து இறையாசீர் பெறுவோம்.

உங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி! பேராலயத்திற்கான நிதியை மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஒப்படைத்து ரசீது பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இறையாசீர் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

*அன்புடன்,*



**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

## மறைமாவட்ட இளங்குருக்களின் தொடர் உருவாக்கப் பயிற்சி

மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களுக்கான Ongoing Formation வகுப்பானது பிப்ரவரி மாதம் 3 மற்றும் 4 தேதிகளில் நடத்தப்பட்டது. இந்த வகுப்புகளை அருட்தந்தை காட்வின் றூபஸ் S.J. அவர்கள் வழிநடத்தினார்கள். இவ்வகுப்பில் 2010 -ம் ஆண்டு குருத்துவ அருட்பொழிவு பெற்ற குருக்கள் முதல் 2024 -ம் ஆண்டுகுருத்துவ அருட்பொழிவு பெற்ற குருக்கள் வரை கலந்துகொண்டார்கள்.

## விவிலிய பணிக்குழு

விவிலிய பணிக்குழுவின் கூடுகையானது 04.02.2025 அன்று மதியம் 1:45 மணிக்கு ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகைக்கு மேதகு ஆயர் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

## திருத்தொண்டர்களின் பெற்றோர்களுக்கான கூடுகை

04.02.2025 அன்று மதியம் 3.00 மணிக்கு திருத்தொண்டர்கள் தங்களுடைய பெற்றோர்கள், பங்குத்தந்தையர்கள் மற்றும் பங்கின் பொறுப்பாளர்களுடன் இணைந்து மேதகு ஆயர் அவர்களை சந்தித்து குருத்துவ அருட்பொழிவுகளுக்கான தயாரிப்புகளை பற்றி ஆலோசித்தனர்.

## துறவியர் சங்கமம்

பெப்ரவரி மாதம் 8-ம் தியதி மறைமாவட்டத்தில் பணிபுரியும் இருபால் துறவியர்களுடைய சங்கமமானது ஆயர் இல்லத்தில் வைத்து சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இச்சங்கமத்தில் மேதகு ஆயர் அவர்கள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார். அருட்தந்தை ஜோஸ் மரியதாஸ் அவர்கள் சிறப்புச் செய்தி வழங்கினார்கள்.



## சுவிசேஷ சங்கம்

சுவிசேஷ சங்க உறுப்பினர்களுக்கான திருவிவிலிய தியான வாசிப்பு பயிற்சி குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து 08.02.2025 அன்று நடைபெற்றது. இந்த வகுப்பை அருள்தந்தை ரெதீஷ் ரிச்சார்ட் அவர்கள் வழிநடத்தினார்.

## எம்.எஸ்.சி. பள்ளிகளின் கத்தோலிக்க மாணவர் கூட்டமைப்பின் ஆண்டுவிழா

15.02.2025 அன்று மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் அரசு உதவிபெறும் எம்.எஸ்.சி. பள்ளிகளின் கத்தோலிக்க மாணவர் கூட்டமைப்பின் ஆண்டுவிழாவானது குழித்துறையில் வைத்து நடைபெற்றது. இதில் அருட்தந்தை அபிஷேக் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து நடந்த ஆண்டுவிழா பொதுக்கூட்டத்திற்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமை வகித்தார். சி.எஸ்.எல். செயலாளர் சஜின் ஜோஸ் ஆண்டறிக்கை சமர்ப்பித்தார். எம்.எஸ்.சி. பள்ளிகளின் தாளாளர் அருள்தந்தை அருள் ஷைஜு, சி.எஸ்.எல். இயக்குனர் அருள்தந்தை ஜெனிடோ, ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மடோனா ஆகியோர் இக்கூட்டத்தில் பேசினர். இறுதியில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவமாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

## நெய்யாற்றின்கரை மறைமாவட்டத்தின் தேர்வு நிலை ஆயர் மார்த்தாண்டம் மறைமாவட்டத்திற்கு வருகை தந்தார்

நெய்யாற்றின்கரை மறைமாவட்டத்தின் புது ஆயராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற பேரருட்தந்தை செல்வராஜ் அவர்கள் 03/03/2025 அன்று நமது மறைமாவட்ட ஆயர் அவர்களை சந்தித்து மார்ச் மாதம் 25-ஆம் தேதி நடக்கவிருக்கின்ற தனது ஆயர் அருட்பொழிவு நிகழ்வுக்கு வருகை தருமாறு அழைப்பிதழ் வழங்கினார்.

# D.S.S கன்னியர் இல்ல அடிக்கல் நாட்டுதல்

மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் 17.02.2025 அன்று சூசைபுரத்தில் D.S.S கன்னியர் இல்ல கட்டிடத்தின் அடிக்கல் நாட்டினார்.

# தாய்மார் சங்கம்

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு திருவிவிலிய தியான வாசிப்பு பயிற்சியானது 02.03.2025 ஞாயிற்றுக்கிழமை தாய்மார் சங்கம் சார்பாக மதியம் 2:30 மணிக்கு குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் சுமார் 70 தாய்மார்கள் கலந்துகொண்டார்கள்.

# குருக்களின் தியானம்

மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்திர தியானமானது 23.02.2025 அன்று தொடங்கி 28.02.2025 வரை பாறசாலை மறைமாவட்ட மேய்ப்பு பணி அலுவலகத்தில் வைத்து சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ்வருடாந்திர தியானத்தினை தர்மபுரி மறைமாவட்டத்தை சார்ந்த பேரருட்தந்தை மரிய ஜோசப் அடிகளார் அவர்கள் வழிநடத்தினார்கள். இவ்வருடாந்திர தியானத்தில் மறைமாவட்டத்தை சார்ந்த அனைத்து குருக்களும் கலந்துகொண்டு தியானித்தார்கள்.

# குருத்துவ அருட்பொழிவின் பொன்விழா கொண்டாட்டம்

நமது மறைமாவட்டத்தின் தொடக்க காலத்தில் மிகவும் சிறந்த முறையில் மறைபரப்பு பணியாற்றியும் மறைமாவட்ட இளங்குருமடத்தின் முதல் அதிபராகவும் இருந்து செயல்பட்ட பேரருட்தந்தை பிலிப் செம்பகசேரி அவர்கள் தன்னுடைய குருத்துவ பணிவாழ்வின் பொன்விழாவை 22.2.2925 அன்று இலவுவிளை இளங்குருமடத்தில் வைத்துகொண்டாடினார். நம் மறைமாவட்ட ஆயர் பொன்விழா நாயகரை வாழ்த்தி பேசினார்.



# மறைமாவட்ட கூடுகைகள்

❖ 17.02.2025 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து மறைமாவட்ட ஆணையங்களின்/ பணிக்குழுக்களின் கூடுகை நடைபெற்றது.

❖ 18.02.2025 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைகுழுவின் கூடுகை நடைபெற்றது.

# இளங்குருமடச் செய்திகள்

❖ இளங்குருமட சகோதரர்களுக்கான இன்ப சுற்றுலாவானது 17/02/2025 அன்று நடைபெற்றது. கேரளா மாநிலத்தில் உள்ள இடுக்கி, வாகமன் பகுதிகளை மையமாக கொண்டு இன்ப சுற்றுலா அமைந்தது. இச்சுற்றுலா அருட்சகோதரர்களுக்கு புத்துணர்வை வழங்குவதாக அமைந்தது.

❖ இளம்குருமடத்தின் முதல் அதிபரான பேரருட்தந்தை பிலிப் செம்பகச்சேரி அவர்களது குருத்துவ பொன்விழா கொண்டாட்டம் இளம்குருமடத்தில் வைத்து 22/02/2025 அன்று நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர், குருக்கள் மற்றும் துறவியரும் வருகை தந்து சிறப்பித்தனர்.

# மறைபரப்புத் தளச்செய்திகள்

## தேவதானப்பட்டி மறைபரப்புத் தளம்

✶ 17.02.2025 அன்று மிட்ஸ் சுயஉதவி குழுவின் சார்பாக தேவதானப்பட்டி குழுக்களுக்கு, கடனுதவி தொகை மிட்ஸ் இயக்குநர் தந்தை அவர்களால் வழங்கப்பட்டது.

✶ 27.02.2025 அன்று திருச்சிலுவை கன்னியர் சமூகத்தின் ‘தலித்தாகூம்’ இயக்கத்தின் சார்பாக ‘மனித கடத்தலை தடுப்போம்’ என்ற தலைப்பில் தேவதானப்பட்டி தாய்மார் சங்க உறுப்பினர்களுக்கு வகுப்பானது எடுக்கப்பட்டது.

# மேய்ப்புப்பணி அறிவுரைகுழு கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்ட மேய்ப்புப்பணி அறிவுரைக்குழு கூட்டம் 04.03.2025 அன்று ஆயர் இல்லத்தில் வைத்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலர் திரு. M. அருள்தாஸ் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அருட்தந்தை ஷாஜி கிறிஸ்டோ அவர்கள் திருத்தந்தையின் ஆணைமடலாக "எதிர்நோக்கு ஏமாற்றம் தராது" என்னும் மைய கருத்துடன் வகுப்பு எடுத்தார்கள். மேதகு ஆயர் அவர்கள் தலைமை உரையில் மறைமாவட்ட நிகழ்வுகள் குறித்தும் வளர்ச்சி குறித்தும், பொது நிலையினர் சபையில் பொறுப்புடன் செயல்படுவது குறித்தும் அறிவுறுத்தினார். பேராலயக் கட்டுமானம், இறைவார்த்தை ஆண்டு, ஜூபிலி ஆண்டு 2025 திருப்பயணம், பங்கு நிர்வாகம், Care Home, மறைமாவட்ட கட்டுமான பணிகளில் இறைமக்கள் பங்கேற்பு, பெருவிளை திருத்தலம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் மறைமாவட்ட செயலர் Very Rev. Fr. பிராங்கிளின் ஜோஸ் மற்றும் ஒவ்வொரு இயக்கங்களின் ஆன்மீக இயக்குநர்களின், கருத்துரைகள் மற்றும் மேய்ப்புப் பணி அறிவுரைக் குழு உறுப்பினர்களின் மறைமாவட்ட வளர்ச்சிக்கான கலந்துரையாடல், மேதகு ஆயர் அவர்களின் பதிவுரையுடனும், இறுதி ஆசீருடனும் கூட்டம் நிறைவு பெற்றது.

# MCYM
## Youth Apostolate

### மறைமாவட்ட பொறுப்பாளர்கள் கூடுகை

மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் இயக்க பொறுப்பாளர்களின் கூடுகையானது பெப்ரவரி மாதம் 2-வது ஞாயிற்றுக்கிழமை மார் எப்ரேம் வளாகத்திலுள்ள MCYM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு இக்கூட்டத்தில் தொடர்ந்து வருகின்ற செயல்பாடுகள் ஓராண்டு செயல்திட்டம் ஆகியவை குறித்தான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

### மிட்ஸ் எழுவோம் இயக்கம் – தன்னார்வலர் கூட்டம்

மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் எழுவோம் இயக்கத்தின் சார்பாக 23.01.2025 அன்று தன்னார்வலர் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் துவங்கி வைத்தார்கள். Dr. ஜீனா ஜோஸ்பின் அவர்கள் தன்னார்வலர்களுக்கு புற்றுநோய் குறித்த தகவல்கள் மற்றும் அந்நோய் வராமல் தடுப்பது எப்படி, வந்த பின் எவ்வாறு சிகிட்சை பெற வேண்டும், நாம் மாற்ற வேண்டிய உணவு பழக்கவழக்கங்கள் என்னென்ன என்பது குறித்து பயிற்சி அளித்தார்கள். பின்னர் புற்றுநோய் எதிர்ப்பு தினத்தன்று நடைபெற கூடிய நிகழ்வுகள் குறித்தும், தன்னார்வலர்கள் பிரச்சாரத்தின் போது எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் விளக்கப்பட்டது. தொடர்ந்து போஸ்டர்கள், துண்டு பிரசுரங்கள் போன்றவை வழங்கப்பட்டன. இந்த கூட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

### புற்றுநோய் விழிப்பணர்வு பிரச்சாரம்

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 4-ம் நாள் உலகம் முழுவதும் புற்றுநோய் எதிர்ப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது. நமது மாவட்டத்தில் தற்போது அதிகரித்து வரும் புற்றுநோய் குறித்து மக்களிடையே விழிப்பணர்வு ஏற்படுத்துவதற்காக 02.02.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி முதல் 5 மணி வரை மிட்ஸ் பணி மண்டலங்களுக்கு உட்பட்ட பகுதிகள், ஆலயங்கள், குழுக்கள் நடைபெறும் இடங்கள் என 200-க்கும் மேற்பட்ட இடங்களில் வைத்து புற்றுநோய் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிகழ்வுகளில்

மிட்ஸ் இயக்குநர், அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள், மிட்ஸ் பணியாளர்கள், தன்னார்வலர்கள், சுய உதவிக் குழு மற்றும் கோல்பிங் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு கோஷங்கள் எழுப்பி துண்டு பிரசுரங்களை மக்களுக்கு வினியோகித்து புற்றுநோயை தடுப்பது குறித்து விழிப்புணர்வு அளித்தனர்.

**உதவித்திட்டங்கள்**

1. 29.01.2025 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 30 நபர்களின் மருத்துவ செலவிற்காக நபருக்கு ரூபாய் 5,000/- வீதம் மொத்தம் ரூபாய் 1,50,000/- வழங்கப்பட்டது.
2. 19.02.2025 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக மார்த்தாண்டம் பணிமண்டலத்தின் 18 சுய உதவி குழுக்களில் உள்ள 72 உறுப்பினர்களுக்கு ரூபாய் 36,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

1. 06.02.2025 அன்று விண்ணைத் தொடு திட்டத்தின் Parents நடத்தப்பட்டது. தமிழக சமூகப்பணி மையத்தின் பணியாளர் திரு. ஜெறோம் அவர்கள் கூட்டத்தை வழிநடத்தினார்கள். இந்த கூட்டத்தில் நான்கு மறைமாவட்டங்களில் உள்ள இயக்குநர்கள், 16 திட்ட பணியாளர்கள் மற்றும் 20 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.
2. 08.02.2025 அன்று தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகளுக்கான மாதாந்திர சிறப்பு வகுப்புகள் நடைபெற்றன. தாய்மார்களுக்கு சித்த மருத்துவர் விக்னேஷ் வீரபத்ரன் அவர்களால் 'உணவே மருந்து' என்னும் தலைப்பில் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த பயிற்சிகளில் 64 மாணவ மாணவிகளும், 48 தாய்மார்களும் கலந்து கொண்டனர்.
3. 10.02.2025 முதல் 14.02.2025 வரை மூலிகை மருந்து (காயத்திருமேனி தைலம்) தயாரிக்கும் பயிற்சியானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. பயிற்சியினை மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் துவங்கி வைத்தார்கள். திரு. ஜூலியஸ் பாண்டியன் மற்றும் வைத்தியர் திரு. முருகேசன் ஆகியோர் பயிற்சியினை நடத்தினர். பயிற்சியில் தைலம் தயாரிக்க தேவைப்படும் மூலிகைகள், அவை கிடைக்கும் பகுதிகள் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் மூலிகை சேகரிப்பு, தைலம் தயாரிக்கும் விதம் ஆகியவை செய்முறை விளக்கங்களுடன் பயிற்சியளிக்கப்பட்டது. இந்த பயிற்சியில் 16 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.
4. 28.01.2025 முதல் 30.01.2025 வரை தளிர்கள் உலகம் திட்டத்தின் உதவியாளரான ஜெர்மெனியை சேர்ந்த திருமதி சூசன்னா லிம்பாஹ் அவர்கள் மிட்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்து பயனாளிகளின் இல்லங்களை சந்தித்தார்கள்.
5. ஜெர்மன்மொழியை பற்றிய ஒரு கூடுகையானது நடைபெற்றது. அதில் ஜெர்மன் நாட்டை சார்ந்த சூசன்னா லிம்பாஹ் அருட்தந்தை பிராங்கிளின் ஜோஸ் அருட்தந்தை ஜெரோம் அருள்தந்தை அஜீஷ்குமார் முனைவர் சீனிவாசக்குமார் மற்றும் முனைவர் சாம்ஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**2025 மார்ச்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **14, 15** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# MCA
## Diocese of Marthandam

### ❖ விவிலிய வினாடி வினா போட்டி

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு மறைமாவட்ட MCA சார்பாக விவிலிய வினாடி வினாப்போட்டியானது 09.02.2025 அன்று பிற்பகல் 3 மணிக்கு மார் இவானியோஸ் CBSE பள்ளிக் கூடத்தில் வைத்து நடைபெற்றது. தொடக்கநூல் முதல் - சபை உரையாளர் வரை உள்ள நூல்களிலிருந்து 150 கேள்விகள் கேட்கப்பட்டது. இப்போட்டியில் 30 வயதிற்கு மேல் உள்ள 43 நபர்கள் கலந்து கொண்டனர்.

### ❖ மருத்துவ சிகிட்சைக்கு உதவி

சபையளவில் மருத்துவ சிகிட்சைக்கு வழங்கப்பட்ட ரூபாய் 10,000/- புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிட்சை பெற்றுவரும் திருமதி விஜிலா அவர்களுக்கு 19.02.2025 அன்று நேரடியாக வழங்கி அவர்களுக்காக ஜெபிக்கப்பட்டது.

### ❖ சபையளவிலான மேலாண்மை குழுக்கூட்டம்

22.02.2025 அன்று நடைபெற்ற சபையளவிலான மேலாண்மை குழுக் கூட்டத்தில் நமது மறைமாவட்ட MCA பொறுப்பாளர்கள் கலந்துகெண்டனர்.

### ❖ மறைமாவட்ட மேலாண்மை குழு

புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பிறகு முதல் மேலாண்மை குழு கூட்டம் 23.02.2025 அன்று மார் எப்ரேம் வளாகத்தில் அமைந்துள்ள இயக்க கட்டிடத்தில் வைத்து தலைவர் யோ. வர்கீஸ் தலைமையில் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை அர்னால்டு டயஸ் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. ஓராண்டிற்கான திட்டமானது வகுக்கப்பட்டது.

### ❖ மூத்த பொதுநிலையினரை கௌரவித்தல்

19.03.2025 புனித சூசையப்பர் தினத்தை முன்னிட்டு பங்கு அளவிலும் மறைவட்ட அளவிலும் பொதுநிலையினரை - மூத்த MCA உறுப்பினர்களை 16.03.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று கௌரவிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.



### ❖ ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகை நினைவுநாள் கட்டுரைப் போட்டி

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் அவர்களின் நினைவு நாள் ஏப்ரல் மாதம் நடைபெறுவதை முன்னிட்டு 23.03.2025 அன்று மார் இவானியோஸ் சி.பி.எஸ்.சி பள்ளியில் வைத்து கட்டுரை போட்டி நடத்த தீர்மானிக்கப்பட்டது.

### ❖ ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் ஆண்டகையின் நினைவுநாள் பாதயாத்திரை

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் லாறன்ஸ் மார் எப்ரேம் அவர்களின் நினைவு நாள் பாதயாத்திரை ஏப்ரல் மாதம் 7-ம் தேதி காலை 6.30 மணிக்கு திருப்பலியுடன் அவரது சொந்த பங்கான வெள்ளெலும்பு ஆலயத்திலிருந்து ஆரம்பித்து வாகனங்களில் பின்குளம் ஆலயத்தில் வந்தடைந்து தூபமன்றாட்டு நடத்தப்பட்டு பாதயாத்திரையாக மார்த்தாண்டம் பேராலய வளாகத்தில் வந்தடையும் என தீர்மானிக்கப்பட்டது.

# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

பெப்ருவரி 19-ம் தேதி அன்று நடைபெற்ற உலக புற்று நோய் விழிப்புணர்வு கருத்துரையில் உண்ணாமலைக்கடை பங்கை சார்ந்த 10 சுய உதவிக்குழு பொறுப்பாளர்கள் கலந்துகொண்னர். திருமதி புஸ்பலதா, திரு. லிஸ்பின் ஆகியோர் இந்நிகழ்வினை பொறுபேற்று நடத்தினர்.

பெப்ருவரி 20-ம் தேதி புற்றுநோய் பாதித்த படுக்கை நோயாளிகளுக்கு மருத்துவ நல உதவி வழங்கும் நிகழ்வானது குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து நடைபெற்றது. சுமார் 35 பேர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வினை அருட்தந்தை அஜீஷ் குமார், திரு. லிஸ்பின் அவர்கள் பொறுபேற்று நடத்தினர்.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை ஆல்பின்
மார்ச் 01



பேரருட்தந்தை ஜோசப் சுந்தரம்
மார்ச் 19



பேரருட்தந்தை ஜோஸ் பிறைட்
மார்ச் 19



பேரருட்தந்தை பிராங்களின் ஜோஸ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ்பின் ராஜ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ் பென்னட்
மார்ச் 19



அருட்தந்தை
ஷிஜு ஜோஸ்
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ் பாறவிளை
மார்ச் 19



அருட்தந்தை
ஜோஸ் G
மார்ச் 19



# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

**மார்த்தாண்டம் மறைவட்ட MCA - புதிய பொறுப்பாளர்கள் பதவி ஏற்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்**

மார்த்தாண்டம் மறைவட்ட MCA புதிய பொறுப்பாளர்கள் பதவி ஏற்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மார்த்தாண்டம் பேராலயத்தில் வைத்து நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு மறைவட்ட MCA தலைவர் திரு. ஜான் தலைமை தாங்கினார். இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிறைட் அடிகளார் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி மார்த்தாண்டம் மறைவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பங்கிற்கும் ஒரு நபர் வீதம் 12 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கினார். பின்னர் புதிய பொறுப்பாளர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

**மறைவட்ட விவிலிய பணிக்குழு**

இறைவார்த்தை ஆண்டினை முன்னிட்டு மார்த்தாண்டம் மறைவட்ட விவிலிய பணிக்குழு சார்பாக 'திருவழிபாட்டில் இறைவார்த்தை' என்ற மைய சிந்தனையில் வகுப்பானது முனைவர் ஜார்ஜ் தாவரத்தில் அடிகளார் அவர்களால் சிறப்பாக நடைபெற்றது. இவ்வகுப்பில் மார்த்தாண்டம் மறைவட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங்களில் செயல்படும் அருள்வாழ்வியங்களின் தலைவர், செயலர், பொருளர் மற்றும் ஆர்வம்கொண்ட இறைமக்களும் கலந்துகொண்டு பலன்பெற்றார்கள். இந்த வகுப்பினை மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வரும், முதன்மை குருவுமாகிய மோன். ஜோஸ்பிரைட் அவர்கள் தொடக்க ஜெபம் செய்து தொடங்கி வைத்தார்கள். மார்த்தாண்டம் மறைவட்ட குருக்களும், அருள்கன்னியர்களும், அருள்சகோதரர்களும் கலந்துகொண்டார்கள்.

அனைத்தையும் மிக சிறப்பாக மார்த்தாண்டம் மறைவட்ட விவிலிய பணிக்குழு இயக்குனர் அருள்தந்தை ஜெனன் ஜெரால்ட் அவர்கள் ஒழுங்கு படுத்தினார்கள்.

## குலசேகரம் மறைவட்டம்

1. 07.02.2025 அன்று அணக்கரை மேரிமவுண்ட் பள்ளிக்கூடத்தில் பள்ளி ஆண்டுவிழாவானது சிறப்புறகொண்டாடப்பட்டது. அதில் அனைத்து மாணவர்களும் தங்களுடைய கலைதிறன்களை சிறந்தமுறையில் வெளிப்படுத்தினர்.
2. பெரியநோன்பின் ஒறுத்தல் முயற்சி பிறருக்கு பயன்படும் வகையில் கடைபிடிப்பதற்காக குலசேகரம் மறைவட்ட ஆலயங்கள் இணைந்து பெரியநோன்பின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒவ்வொரு விதமான பொருட்களை காணிக்கையாக கொடுத்து பின்னர் அந்த காணிக்கை பொருட்களை குருத்து ஞாயிறன்று பிலாங்காலை முதியோர் இல்லத்திற்கு கொடுத்துதவ உள்ளனர்.

### பெரிய நோன்பு ஒறுத்தல் காணிக்கை - 2025

| | | |
|---|---|---|
| முதல் வாரம் 02.03.2025 | - | சோப்பு |
| 2 -ம் வாரம் 09.03.2025 | - | பற்பசை, பல்துலக்கி |
| 3 -ம் வாரம் 16.03.2025 | - | மசாலை பொருட்கள் |
| 4 -ம் வாரம் 23.03.2025 | - | பருப்பு |
| 5 -ம் வாரம் 30.03.2025 | - | சிறுபயறு |
| 6 -வாரம் 06.04.2025 | - | எண்ணெய் |
| 7 -வாரம் 13.04.2025 | - | அரிசி (குருத்து ஞாயிறு) |

இறுதி வாரம், குருத்து ஞாயிறு அன்று மாலை 4 மணிக்கு அனைவரும், அனைத்து பொருட்களோடு பிலாங்காலை முதியோர் இல்லதிற்கு சென்று வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.



## பனச்சமூடு மறைவட்டம்

### பனச்சமூடு மறைவட்ட MCA மேலாண்மை குழு கூட்டம்

பனச்சமூடு மறைவட்ட MCA மேலாண்மை குழு கூட்டமானது 02.02.2025 அன்று புலியூர்சாலை ஆலயத்தில் வைத்து பங்கு பணியாளர் அருட்தந்தை அபிஷேக் ராஜ் முன்னிலையில் மறைவட்ட தலைவர் திரு. வர்கீஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஓராண்டிற்கான திட்டமானது தயார் செய்யப்பட்டது.

### இறைவார்த்தையாண்டு சிறப்பு நிகழ்வுகள்

இறைவார்த்தையாண்டை முன்னிட்டு இறைவார்த்தையையும் திருப்பலியின் பொருளை உணரவும் மறைபரப்புப் பணியின் தாக்கம் முதலியவற்றை உள்ளடக்கி அருட்தந்தை சஜித் பிரான்சிஸ் அவர்களால் 02.02.2025 அன்று தச்சூர்கோணம் பங்கில் வைத்து திருப்பலியும் திருப்பலியை தொடர்ந்து சிறப்புரையும் வழங்கப்பட்டது. மறைவட்ட MCA பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வினை தொடர்ந்து 16.03.2025 அன்று இதைப்போன்று வெள்ளச்சிப்பாறை கருமானூர் பங்குகள் இணைந்து கருமானூர் ஆலயத்தில் வைத்து நடத்தலாமென தீர்மானிக்கப்பட்டது.

## கொல்லங்கோடு மறைவட்டம்

### மறைபரப்புத்தளம் சந்தித்தல்

கொல்லங்கோடு மறைவட்ட MCA சார்பில் களக்காடு, நல்லநாதபுரம், ஜெ.ஜெ. நகர் உள்ளிட்ட மறைபரப்புதளங்கள் சந்திக்கப்பட்டது. மறைவட்ட ஆன்மீக இயக்குநர் தலைமையில் 18 பேர் கலந்துகொண்டு மக்களோடு உரையாடி, உணவருந்தி, அவர்களுடைய தேவைகளை கேட்டறிந்து உதவி செய்ய முன்வந்தார்கள்.

# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

**ஹோம் சிறப்புக்குழந்தைகளின் ஒரு நாள் கல்லூரி வாழ்க்கை**

குழித்துறை, ஸ்ரீ தேவி குமாரி மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் மற்றும் நிர்வாகத்தினர் ஹோம் அறிவுசார் குறைபாடுடைய குழந்தைகளை அழைத்து கல்லூரி மாணவிகளுடன் கலந்துரையாடி கல்லூரி பார்வையிடும் நிகழ்வு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்நிகழ்வு 21.02.2025 அன்று கல்லூரி அரங்கில் வைத்து நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பிந்துஜா அவர்கள் தலைமை தாங்கி இந்நிகழ்வினை துவக்கி வைத்தார்கள். தொடர்ந்து நாகர்கோவில் நாஞ்சில் நாதத்தின் முன்னாள் செயல் இயக்குநர் திருமிகு அலோசியஸ் அவர்கள் சிறப்புக் குழந்தைகளும் கல்லூரி மாணவர்களும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை நடனம், பாடல், அறிமுகம் மற்றும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளுடன் மிகச்சிறப்பாக வழிநடத்தினார்கள். தொடர்ந்து சிறப்புக் குழந்தைகளுக்கும் பணியாளர்களுக்கும் கல்லூரி மாணவிகள் உறவின் விருந்து வழங்கி மகிழ்ந்தார்கள்.

மதியத்திற்கு பின் கல்லூரி மாணவிகள் தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்கள். அனுபவ பகிர்வு நிகழ்விற்கு குழித்துறை ஒருங்கிணைந்த நீதிமன்ற சார்பு நீதிபதி மாண்புமிகு A. சுந்தரி B.A, B.L. அவர்கள் சிறப்புவிருந்தினராக கலந்துக் கொண்டார். தொடர்ந்து கல்லூரி மாணவிகள் சிறப்புக்குழந்தைகளை பத்து குழுக்களாக பிரித்து கல்லூரி வளாகத்தை முழுதும் சுற்றி காண்பித்தார்கள். கல்லூரி வகுப்பறைகள், ஆய்வகங்கள், அலுவலகம், பூங்கா என அனைத்து இடங்களிலும் சுற்றிக் காண்பித்து மகிழ்வித்தார்கள். நிகழ்ச்சியின் இறுதியில் சிறப்புக் குழந்தைகள் மற்றும் கல்லூரி மாணவிகளின் கண்கவர் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. இறுதியாக நாட்டுப்பண் பாடலுடன் சிறப்புக் குழந்தைகளின் ஒரு நாள் கல்லூரி வாழ்க்கை நிறைவுபெற்றது. நினைவு பரிசாக அனைவருக்கும் மரக்கன்றுகள் இனிப்பு பொட்டலங்களும் கல்லூரி முதல்வர் பிந்துஜா வழங்கி சிறப்பித்தார்கள்.



# ஆயரின் பெப்ரவரி மாத நிகழ்வுகள்



- 2 ➢ கோயம்புத்தூர் மறைமாவட்டம் ஆர்.எஸ். புரம் தேவாலயத்தில் திருமுழுக்கு அருட்சாதனம் நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.
- 3-4 ➢ மார்த்தாண்டம் மறைமாவட்ட இளங்குருக்களின் தொடர் உருவாக்கப் பயிற்சியில் பங்கெடுத்து ஆசியுரை வழங்கினார்.
- 6 ➢ மலங்கரை உயர் குருமடத்தின் ஆணையக் கூட்டத்தில் பங்கேற்றார்.
- 7 ➢ அணக்கரை CBSE பள்ளி ஆண்டுவிழாவில் தலைமையேற்று உரையாற்றினார்.
- 8 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற துறவியர் சங்கமத்தில் பங்கேற்று ஆசியுரை வழங்கினார்.
- 10 ➢ கிறிஸ்தவ ஐக்கிய பேரவை கூட்டத்தில் தலைமையேற்று பங்கேற்றார்.
- 11 ➢ கொறவலங்காடு மார்த் மரியம் சீறோ மலபார் தேவாலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி ஆசீர்வதித்தார்.

12 ➤ Goodness தொலைக்காட்சி சார்பாக நடைபெறும் ‘ஆயர் பேசுகிறார்’ என்னும் நிகழ்ச்சியில் பங்கேற்று மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் மறைபரப்பு பணிகளை விளக்கிக் கூறினார்.

13 ➤ திருவனந்தபுரம் உயர் மறைமாவட்ட குருத்துவ அருட்பொழிவில் கலந்து கொண்டு புது குருக்களை ஆசீர்வதித்தார்.

14 ➤ CSL ஆண்டுவிழாவில் பங்கேற்று ஆசியுரை வழங்கினார்.

14 ➤ குழித்துறை மறைமாவட்டம் திருத்துவபுரம் பேராலயத்தில் திருமண அருட்சாதனம் நிறைவேற்றினார்.

15 ➤ ECI சபை புது ஆயரின் அருட்பொழிவு விழா வாழ்த்துக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

15 ➤ Malankara School of Commerce - ன் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றினார்.

17 ➤ சூசைபுரத்தில் D.S.S அருட்சகோதரிகளுக்காக கட்டப்பட விருக்கும் புது கன்னியர் இல்லத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

18 ➤ MCC மரியகிரி கல்லூரி பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டமளித்து சிறப்பித்தார்.

20 ➤ MCC மரியகிரி கல்லூரி ஆண்டுவிழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார்.

21 ➤ தேமானூர் பள்ளி ஆண்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

22 ➤ மார்த்தாண்டம் மறைமாவட்டம் சார்பாக நடத்தப்பட்ட பேரருட்தந்தை பிலிப் செம்பகசேரி அவர்களின் பொன்விழா நன்றித் திருப்பலியில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்.

23-28 ➤ மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்களின் ஆண்டு தியானத்தில் கலந்துகொண்டார்.


28 ➤ குளப்பாறை பள்ளி ஆண்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்.




## இம்மாதம் நினைவு கூர

மார்ச் 2025


1 – பெரிய நோன்பு காலம்
2 – கொத்தினே ஞாயிறு
பெரிய நோன்பின் முதல் ஞாயிறு
3 – சுபுகோனோ
5 – மோறான் மார் பசேலியோஸ் கிளிமீஸ் காதோக்கோஸ் ஆண்டகை பதவியேற்ற நாள்
8 – மார் எஃப்ரேம், மார் தியடோர் நினைவு
9 – கர்போ ஞாயிறு, பெரிய நோன்பின் இரண்டாம் ஞாயிறு
செபஸ்திய நகர் 40 இரத்தசாட்சிகள்
13 – மேதகு ஆயர்கள், வின்சென்ட் மார் பவுலோஸ், தோமஸ் மார் அந்தோணியோஸ், சாமுவேல் மார் ஐரேனியூஸ், பிப்போஸ் மார் ஸ்தேபானோஸ் ஆண்டகைகளின் ஆயர் திருநிலைப்பாடு

19


16 – முசறியோ ஞாயிறு
பெரிய நோன்பின் மூன்றாம் ஞாயிறு
17 – புனித பேட்ரிக்
18 – எருசலேம் நகர் மார் கூறிலோஸ்
தோமஸ் மார் கூறிலோஸ் ஆண்டகையின் பெயர் விழா

25


19 – மார் யோசேப்பு
21 – மார் யோவான் கிளிமாக்கூஸ்
23 – கினானைத்தோ ஞாயிறு
பெரிய நோன்பின் நான்காம் ஞாயிறு
25 – மங்கள வாழ்த்துத் திருநாள்
26 – பாதி நோன்பு (கோகுல்தா நிறுவுதல்)
குட்காவு மறைமாவட்டம் உதயம்

26


30 – க்பிப்தோ ஞாயிறு
பெரிய நோன்பின் ஐந்தாம் ஞாயிறு

## அருட்தந்தை பிலிப் செம்பகச்சேரி அவர்களின் பொன்விழா கொண்டாட்டம்



## விவிலிய பணிக்குழு கூடுகை



## குருக்களுக்கான வருடாந்திர தியானம்



## D.S.S கன்னியர் இல்ல அடிக்கல் நாட்டுதல்



## Pastoral Council Meeting



## நெய்யாற்றின்கரை மறைமாவட்டத்தின் தேர்வுநிலை ஆயரின் சந்திப்பு



## MCA



## மறைவட்ட செய்திகள்




## சுவிசேஷ சங்கமம்



## Health for One Million



## மறைபரப்புத்தளச் செய்திகள்




## MIDS

